தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத்தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 7 (1-9-65) இதழ் 201
விசுவாவசு ஆவணி 16 ஜ: அவ் பிறை 4 புதன்கிழமை

சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality
BLOCK
MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

# 151 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

## கிராமவாசிகளை கொன்றுவிட்டு பல இடங்களில் அவர்கள் பின்வாங்குகின்றனர்

### அதிகாரி உட்பட 15 பேர் கைது

ஸ்ரீநகர், ஆக. 31

ஊரி, ஹாஜிபீர் பகுதியில் இன்று நடைபெற்ற கைகலப்பில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தானியர் அங்கிருந்து விரட்டப்பட்டபின் 60 சடலங்களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனல் இதர பிணங்களை அவர்கள் இழுத்துச்சென்றுவிட்டனர்.

இச் சண்டையில் 50 பேர் படுகாயமடைந்தனர். ஒரு அதிகாரி உட்பட 14 பேர் சிறைபிடிக்கப்பட்டனர்.

பூஞ்ச் பகுதியில் நடைபெற்ற மற்றோர் சண்டையில் 50 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். மற்றோரிடத்தில் 15 பாகிஸ்தானியர்களும், வேறு இரு சண்டையில் 26 பாகிஸ்தானியரும் கொல்லப்பட்டனர்.

நௌகாங், சக்கோரி ஆகிய இடங்களில் பாகிஸ்தானியர் பின்வாங்கிவருகிறார்கள். தோல்வியின் ஆத்திரத்தில் அவர்கள் கிராமவாசிகளைக் கொன்றுவிட்டுப் போய்விடுவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியத்துருப்புகள் விடுவித்த 5000 அஸாத் காஷ்மீர் மக்கள், கடந்த 18 ஆண்டுகளாக சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களை கண்டதே இல்லை என்றும், கந்தைத் துணிகளுடன் கண்களில் நீர்சொரிய அவர்கள் இந்தியத்துருப்புகளை வரவேற்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## இலவச விதைநெல் வழங்க உணவு மந்திரி உடன்பாடு

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சியிலுள்ள கரைச்சி—துணுக்காய்ப் பகுதிகளில் மூன்று முறை நெல் விளைச்சல் இல்லாத கமக்காரர்களுக்கு இலவசமாக 20,000 புசல் விதைநெல் வழங்குவதற்கு உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா உடன்பாடு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உணவு மந்திரியுடனும், உணவுமந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவாவுடனும், கமத்தொழில் சேவை ஆணையாளருடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இவ்வுடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டுமுறை, ஒருமுறை விளைச்சல் இல்லாத கமக்காரர்களுக்கும் இலவச விதைநெல் வழங்கப்படவேண்டுமென்று கிளிநொச்சி எம். பி. சமர்ப்பித்த கோரிக்கையையும் மந்திரி பரிசீலனை செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தையின்போது, பூநகரிப் பகுதி வயல்களில் கடல்நீர்புகுந்து கொண்டதால் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், இதற்கான நிவாரண வேலைகளுக்கு ஏழுலட்சம் ரூபாய் வழங்கப்படவேண்டுமென்றும் கிளிநொச்சி எம். பி. கேட்டதற்கும் மந்திரி பண்டா அதனையும் பரிசீலனை செய்வதாகச் சொல்லியுள்ளார்.

விரைவில் பூநகரிப்பகுதிக் கமக்காரர்களுக்குபண உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் மந்திரி எம். பி யிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

## கூழாவடி கொலை வழக்கு 14-ந் திகதிவரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

ஆனைக்கோட்டை கூழாவடியில் நிகழ்ந்த கொலை சம்பந்தமாக இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்படவில்லை.

நேற்றுக்காலை மாஜிஸ்டிரேட் மீண்டும் இவ்வழக்கை செப்டம்பர் மாதம் 14-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இக்கொலை சம்பந்தமான பொருட்கள் ரசாயன பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலும் விசாரணை செய்யவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் இரண்டாம் திகதி கூழாவடியில் நிகழ்ந்த கோரச்சம்பவம் காரணமாக திருமதி ராஜமார்த்தாண்டன் மரணமடைந்ததைத் தொடர்ந்து சந்தேகத்தின் மீது பொலிஸாரினல் கதிரவேலு காளிமுத்து கைதுசெய்யப்பட்டது வாசகநேயர்கள் அறிந்ததே.

அழைப்பு

இன்று 1-9-65 புதன்கிழமை காலை 6 மணிக்கும் 7-30 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்
கொழும்பு ஸ்ருடியோ
ஸ்தாபனத்தின் கிளை ஒன்று அச்சுவேலியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.
ஆதரவாளர்கள், அபிமானிகள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கொழும்பு ஸ்ருடியோ
ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம்.

## "உருப்படியாக ஒன்றுமில்லை"

குரும்பசிட்டி, செவ்.

கூட்டு அரசாங்கம் பதவியிலிருந்த மூன்றுமாத கால எல்லைக்குள் தமிழர்களது உரிமைகள் வழங்கப்படவில்லை என ஆத்திரம் அடைந்த தமிழ்த் தலைவர்கள் கடந்த ஐந்துமாத காலமாக தேசிய அரசாங்கத்துடன் கூடிக்குலாவி கூட்டம் நடத்தினுர்களேயன்றி உருப்படியாக எதையும் பெற்றுக்கொள்ளவில்லை'' என்று வலி வடக்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க விசேஷ கூட்டம் ஒன்றில் திரு. எஸ். அருச்சுனன் பேசும்போது குறிப்பிட்டார். சுன்னுகத்தில் மேற்படி கூட்டம் திரு. விஜயானந்தம் தலைமையில் நடைபெற்றது.

## "'விட்டாஸ்பிரே' பால்மா திட்டமின்றி இறக்குமதி"

### ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை தமிழிலும் வெளியாகும்

கொழும்பு, செவ்வாய்

",ஆறுமாதத்திற்கு மட்டும் உத்தரவாதமுள்ள 'விட்டாஸ்பிரே' என்ற பால் உணவு, பால்சபை 'ஸ்ரோரில் ஐந்து வருட காலத்திற்கு விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு கையிருப்பில் உள்ளது.

ஆடிட்டர் ஜெனரல் திரு. பி, எஸ். டபிள்யு. பெர்ணுண்டோ, நாற்பது கூட்டு ஸ்தாபனங்கள், சபைகள் அரசாங்க உதவிபெற்ற நிலையங்கள், ஆகியவற்றின் வருடாந்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்,

ஏப்ரல் மாதம் 24-ம் திகதி பால்சபையில் நடந்த பரிசோதனையின்படி 2,473,900 ருத்தல் 'விட்டாஸ்பிரே' பால் உணவு கையிருப்பில் உள்ளதாக் கூறப்படுகிறது மாதத்தில் இப்பால் உணவு விற்பனைபடி கணக்குபார்த்ததில், இக்கையிருப்பு ஐந்து வருடத்திற்கு போதியதென அறியப்படுகிறது. தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்ட ஆறுமாதகால உத்

(6-ம் பக்கம் பார்க்க)

## இதயத்தின் சூறாவளி இன்னும் தணியவில்லை

நெடுந்தீவு, செவ்.

சூறாவளி ஏற்பட்ட காலம் பல கடந்துவிட்டு போதிலும் அதற்குப் பலியானவர்களின் மனைவி, மக்களின் இதயங்களைவிட்டு 'சூறாவளி' தணிந்ததாகவில்லை. இங்குள்ள குடும்பங்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களும் தொல்லைகளும் அதற்குச் சான்றுபகரும்.

கணவர்களைப் பலிகொடுத்ததுமல்லாமல், உதிரத்தை வியர்வையாக்கி உழைத்துப் பெற்ற நகைகளையே அடைவு வைத்து பெற்ற வள்ளங்களும் இழந்ததோடு மாத்திரமல்லாது, தொடர்ந்துவாழ்க்கையைக்கொண்டு செலுத்த வக்கற்ற தமக்கு எதற்கு வாழ்க்கை என்ற விரக்தி மனப்பான்மையுடன் வாழ்ந்துவருகிறார்கள். சூறாவளிக்குத் தமது கணவர்களைப் பறிகொடுத்துவிட்ட இளம்பெண்கள்!

சென்ற சில காலமாக இவர்கள் அனுபவித்துவரும் சொல்ல முடியாத இன்னல்களுக்கு இனி அரசாங்கம் சிறிதளவு நிவாரணம் வழங்குவதால் அது அவற்றுக்கு ஈடுசெய்ய முடியாது.

சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் திட்டமிட்டு பண உதவி செய்வதாலும், இவர்களுக்கு உதவியளிப்பதற்கென்றே சங்கங்கள் துவக்கப்பட்டு நிவாரணம் அளிப்பதன் மூலமுமே இவர்களது கஷ்டங்களைப் போக்கலாம்.

தேசிய அரசாங்கம் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இவர்களது விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து மாதத்திட்டத்தில் நிவாரண உதவி வழங்கவேண்டும் என்று நெடுந்தீவுப் பகுதி மக்கள் ஊர்காவற்றுறை எம். பி. திரு. நவரத்தினம் மூலம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

முன்னேற்றத்துக்கு போராட்டம் ஓர் உறுதியான அறிகுறியும் நிபந்தனையுமாகும். இன்றேல் வாழ்க்கையே உப்புச்சப்பில்லாமற் போகும். ஆத்மீகப் போராட்டத்தின் முடிவு அன்புதான்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 16 உ (1-9-65)

## ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை

இலங்கை அரசாங்க நிர்வாகம்பற்றி ஆடிட்டர் ஜெனரல் வெளியிட்டுள்ள அறிக்கை இம்முறை தமிழ் உள்ளிட்டு மூன்று மொழிகளிலும் வெளியாகுமென்று தெரிகிறது. இது வரவேற்கத் தக்கதாகும். அறிக்கையை மூன்று மொழிகளிலும் அச்சிடுவதால் செலவு அதிகரிக்குமென்றும் தமிழ் மொழிக்கு இந்நாட்டில் இடமே இல்லாமல் செய்ய சிலர் சதி செய்கையில், இவ்விதம் தமிழிலும் அறிக்கைகள் வெளியாவது அவசியமாகும். தமிழரின் முக்கிய உணர்ச்சியையும் உரிமையையும் கருதி தேசிய அரசாங்கம் இவ்வித நடவடிக்கை எடுத்தது போற்றத்தக்கது. எல்லாத் துறைகளிலும் இவ்வித கொள்கையை அனுஷ்டிப்பதாயின், இந்நாட்டில் மொழிப் பிரச்னைக்கே இடமில்லாது போகும்.

1963-64ம் வருட அரசாங்க நிர்வாகம்பற்றி ஆடிட்டர் ஜெனரல் வெளியிட்டுள்ள அறிக்கையைப்பற்றி வெளியாகியுள்ள சில விவரங்களைப் பார்க்கையில், இதற்குப் பொறுப்பானவர்கள் பெருமையோ மகிழ்ச்சியோ அடைவதற்கில்லை. சிறப்பாக சில கைத்தொழில் கார்ப்பரேஷன்கள், தேசியமயமான ஸ்தாபனங்கள் இவற்றின் நிர்வாகம் குறித்து அவர் எடுத்துக் காட்டியுள்ள ஊழல்களைப் பார்க்கையில் இந்த ஸ்தாபனங்களை இனி அரசாங்கம் தொடர்ந்து நடத்துவது விரும்பத்தக்கதோ என்று சந்தேகம் ஏற்படுவதாக இருக்கின்றது. உதாரணமாக பால் சபையினர் தயாரிக்கும் ''விட்டாஸ்பிரே'' எனும் பால் மாவு 6 மாதத்துக்கே கெடாமல் இருக்குமென்று உத்தரவாதம் அளிக்கப்படுகிறதாம். ஆனால் பால்சபையின் வசம் இப்போது இந்நாட்டின் ஐந்து வருட தேவைக்கான அந்தச் சரக்கு தேங்கி இருப்பதாகவும், சுமார் 25 லட்சம் ராத்தல் விட்டாஸ்பிரே கைவசம் இருக்கையில் சென்ற மே மாதத்தில் சுமார் 5 லட்சம் ராத்தல் சரக்கு கப்பலில் வந்துள்ளதாகவும் ஆடிட்டர் ஜெனரல் சுட்டிக் காட்டி, முன்கூட்டியே நன்கு ஆலோசனைசெய்து திட்டம் தயாரிக்கவில்லையென்றும், அவ்வித திட்டம் அவசியமென்றும் கூறியுள்ளார். பொதுப் பணத்தை லட்சக்கணக்கில் செலவு செய்யும் ஒரு ஸ்தாபனம் முன்கூட்டி இதையெல்லாம் யோசித்துத் திட்டம் தயாரிக்காதது மன்னிக்க முடியாத குற்றமாகும். தனிப்பட்ட எவரும் இத்தொழிலை நடத்துவதாயின் இப்படி ஒருக்காலும் செய்யமாட்டார்கள்.

இலங்கை போக்குவரத்துசபையிலே பல சிப்பந்திகள் சம்பளமில்லாத 'லீவி'ல் இருக்கையில் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வந்துள்ளதாம்! பல தஸ்தாவேஜுகளும் சரிவர இல்லை என்றும் ஒரு டிப்போவிலே ஏராளமான புதிய டயர்கள் மாதக்கணக்காக வெயிலிலும் மழையிலும் பாழாவதாகவும், சீனத்திலிருந்து டயர்கள் வரவழைத்ததில் இச்சபைக்கு பத்து லட்ச ரூபாய் நஷ்டமென்றும், மந்திரிசபையின் சம்மதம் பெறுமுன் சிப்பந்திகளுக்கு 36 லட்ச ரூபாய் 'போனஸ்' அளிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் பலபல நிர்வாக ஊழல்களையும்இந்த அறிக்கை அம்பலப்படுத்துகின்றது.

'ஏர்ஸிலோன்' ஸ்தாபனத்துக்கு சுமார் 5 லட்சம் நஷ்டமாம். அரசாங்கம் நடத்தும் 18 கைத்தொழில் கார்ப்பரேஷன்களில் ஐந்துக்கு முன்னிலும் அதிகமான நஷ்டமும், ஒன்றில் குறைந்த நஷ்டமும், 6 ஸ்தாபனங்கள் இலாபமும் பெற்றுள்ளதாயும் மற்ற 6 ஸ்தாபனங்களின் கணக்குகள் கிடைக்கவில்லை என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது. ஸ்ரீலங்கா சர்க்கரை கார்ப்பரேஷனுக்கு முந்திய வருடம் 16 லட்சம் நஷ்டம். அது மறு வருடத்தில் 34 லட்சத்துக்கு அதிகரித்துள்ளது. இலங்கை எண்ணெய் கொழும்பு கார்ப்பரேஷனின் இதுவரை மொத்த நஷ்டம் 94 லட்சமாம். வருஷா வருஷம் நஷ்டம் அதிகரிக்கின்றது. காகிதத்துக்கு 13 லட்சம், பரந்தனுக்கு 10 லட்சம், சிறிய கைத்தொழில் 12 லட்சம், இப்படியான நஷ்டக் கணக்கு கவலை அளிக்கத்தக்கதாகும். ஆரம்ப திசையில் நஷ்டம் ஏற்படுவது இயற்கை. காரணம் கண்டுபிடித்து அதைநீக்கவும் நஷ்டத்தைக் குறைக்கவும் கூடுமானதைச் செய்யாவிடில் அது பெரிய தேசிய நஷ்டத்தில் முடியும்.

சிமிந்தி கார்ப்பரேஷனில் முந்திய வருடத்தில் 60 லட்சம் லாபம் கிடைத்திருக்கையில் 1963-ம் வருடத்தில் லாபம் ஒரு லட்சம் கூடியிருப்பதாகக் கணக்குக் கூறுகிறது. லாபம் அதிகரித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கத்தக்கதே. ஆனால் சிமிந்தி விலையை அதிகமாக நிர்ணயித்திருப்பதால்தான் இந்த லாபத்தைக் காட்ட முடிகிறதென்ற உண்மையை நினைக்கும்போது இந்த மகிழ்ச்சி பெரிதும் குறைந்துவிடுவதாகவுள்ளது.

பல கைத்தொழில்களையும் வர்த்தகத்தையும் தக்க முன்னேற்பாடுகளும் அனுபவமுமின்றி தேசியமயமாக்க வேண்டுமென்று அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததன் பயனே இந்த அவலநிலை என்று எண்ணக்கூடியதாக உள்ளது. ஆடிட்டர் ஜெனரல் சுட்டிக் காட்டியுள்ள இக்குறைபாடுகளைப் பார்க்கையில் இவ்விஷயத்தைப்பற்றிதேசீய அரசாங்கம் அடியோடு புனராலோசனை செய்து ஊழல்களை ஒழிக்கவும், இவை லாபகரமாக நடக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆடிட்டர் ஜெனரல் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்து, வருடாவருடம் பலபல ஊழல்களையும் எடுத்துக் காட்டுகின்றார். ஆனால் அவற்றின்மீது சம்பந்தப்பட்டவர்கள் உடன் தக்க நடவடிக்கை எடுத்து நிலைமையை சீர் செய்யாவிடில் இவ்வளவு சிரமப்பட்டு அறிக்கைகளை வெளியிடுவதால் என்ன பயன்?

## ஆசிரியருக்கு கடிதங்கள்

### பஸ் சேவையிலும் பாரபட்சமா?

நெடுந்தீவு கிழக்கில் உள்ள மக்கள் குடிதண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் துறைமுகத்தில் இருந்து மேற்கே 500 யாருக்கப்பால் நிறுத்தப்பட்டுள்ளது. துறைமுகத்துக்குக் கிழக்கேயுள்ள மக்கள் பெரும்பாலும் 3 மைல்கள் நடந்துவந்து தண்ணீர் எடுத்துக்கொண்டுபோகிறார்கள். இது ஒரு புறம் இருக்க பஸ் சேவையும் துறைமுகத்திலிருந்து மேற்குப்பகுதி வரைக்கும்தான் சேவை புரிகிறது இச்சேவை துறைமுகத்துக்குக் கிழக்கே குறைந்தது ஒரு மைல் தூரத்துக்காவது நீடிக்கப்படுமேயானால் பொது மக்கள் பலர் பலனடையலாம். வெய்யில் மழைக் காலங்களில் மோட்டார் வள்ளங்களில் பிரயாணம் செய்யும் மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், நோயாளருக்கும் இச்சேவை மிகவும் பயனளிக்கும். இந்த ஒரு மைல் தூரமும் சேவையில் உள்ள வீதியைப் போன்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓர் அன்பர்
நெடுந்தீவு.

ஃ ஃ ஃ

### வீதிக்கு பெயரிடும் தீர்மானம் நிறைவேறவில்லை

இணுவில் - மானிப்பாய் வீதியை ஆனந்தக் குமாரசுவாமி வீதியெனப் பெயரிடுவது என மானிப்பாய் கிராமசபை மேற்கொண்ட முடிவு குறித்து உடுவில் கிராமசபைத் தலைவர் கண்டனம் தெரிவித்துள்ளார் என இம்மாதம் 19-ம்திகதி ஈழநாட்டில் வெளியான செய்தி சரியல்ல. இவ்வித தீர்மானமொன்று மானிப்பாய் கிராமசபையால் இதுவரை நிறைவேற்றப்படவில்லையென்பதை தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

சி. மார்க்கண்டு
மானிப்பாய்

### ஏன் இந்த அநீதி?

வேலணை மேற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கட்டுப்பாட்டு விலைக்கு மீறி இலாபகரமான முறையில் பொருள்களை விற்கின்றனர். இது பற்றி மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டதன் விளைவாக அங்குள்ள பலர் சங்கக் காரியதரிசியைஇதுபற்றி விளக்கம் தருமாறு கேட்டனர்.

கொள்விலை நஷ்டத்திற்கு பொருள்களைக் கொடுக்கத் தாம் தயாரில்லையெனப் பதில் கொடுக்கப்பட்டது. 'லக்ஸபாறு' பற்றறி 41 சத விலைக்கட்டுப்பாடு இருக்கையில், 45 சதப்படி விற்பனவு நடைபெறுகிறது. இதற்குரிய ஆதாரங்களை நான் காட்டத் தயாராகவுள்ளேன்

சம்மேளன நிர்வாகம் கொள்விலை நஷ்டம் ஏற்படினும் கட்டுப்பாட்டு விலைக்குப் பொருள்களை விற்பனவு செய்யும்படி உத்தர விட்டபின்னரும் அதிகப்படியான விலையில் ஒரு பொது ஸ்தாபனம் விற்பனை செய்வது பாராட்டத்தக்கதன்று.

இந்த விஷயம் பற்றி வேலணை வாழ் மக்களின் நலன்கருதி மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பி. துரையப்பா
வழக்கறிஞர்.
வேலணை.

## "சமூகசேவை இயக்கங்களில் அரசியல் பிரச்னை இடம்பெறக்கூடாது"

### ஆண்டு நிறைவு விழாவில் யாழ்மேயர் பேச்சு

குரும்பசிட்டி, செவ்வாய் ''இளைஞர்கள் ஊக்கத்துடனும் உறுதியுடனும் செயலாற்றவேண்டும், தோல்வியைக் கண்டு மனம் தளராது சகிப்புத்தன்மையுடன் ஒற்றுமையான முறையில் நின்று விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவேண்டும். விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தாது எதிர்கால வாழ்க்கையிலும் இளைஞர்கள் நம்பிக்கை வைத்தல் வேண்டும். சமூக சேவை இயக்கங்களில் அரசியல் பிரச்னைகளை தலைதூக்க இடமளிக்காது சமூக முன்னேற்றத்திற்கு உழைத்தல்வேண்டும். இன்றைய இளைஞர்கள் அந்நியர் ஆட்சிக் காலங்களில் மக்கள் எப்படி அரசாங்க உத்தியோகங்களைப் பெற்று வாழ்க்கை நடத்தினரோ அத்தகைய வாழ்வைத்தான் இன்றும் விரும்புகின்றனர். பொருளாதார நெருக்கடியால் நாடு சீரழிந்து வரும் இந்நேரத்தில் அரசாங்க உத்தியோகங்களை நாம் எதிர்நோக்கக்கூடாது. முடிக்குரிய காணிகளைப் பெற்று அரசாங்கம் அளிக்கும் உதவிகளையும் பயன்படுத்தி விவசாயத்தின்மூலம் பொருளாதார அபிவிருத்தியினைப் பெருக்க படித்த வேலையற்ற தமிழ் வாலிபர்கள் முன்வரவேண்டும்.''

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக ஏழாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டயாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு. எஸ். ஸி. மகாதேவா தமது சொற்பொழிவின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச் சங்க திறந்த வெளியரங்கில் திரு. இ. மகேசன் தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெற்றது. திரு. மகாதேவா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''பாடசாலைகளில் தொழில்கல்விக்கு முக்கிய இடம் அளிக்கவேண்டும். பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளில் எல்லாம் மாணவர்களுக்கும் தொழிற்கல்விகட்டாயபாட

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. மகாத்மா காந்தி, ராஜாஜி இவர்களது பேரப்பிள்ளையான ராஜ்மோகன் காந்தி நாளை வியாழனன்று பகல் 2 மணிக்கு விமானமூலம் கொழும்புக்கு வருகிறாராம்.

மகாத்மாவின் புதல்வரான தேவதாஸ் காந்தியும் ராஜாஜியின் புதல்வியார் லெட்சுமியும் விவாகம் செய்துகொண்டது அன்பர்களுக்குத் தெரிந்திருக்கும். ராஜாஜி என்ற பெயரிலிருந்து 'ராஜ்' என்றும், மோகன் கரம்சந்த் காந்தி என்ற பெயரில் மோகன் என்ற சொல்லும் சேர்ந்து ராஜ்மோகன் என்று இந்த அருமைப் பேரனுக்குப் பெயர் வைத்துள்ளனர். அவரை, பிலிப்பைன்ஸ் நாட்டிலே நேரில் பார்த்தேன். அந்த இரு ஒப்பற்ற தலைவர்களின் மேலான அறிவும், பண்பும் அவரிடம் சேர்ந்துள்ளதுபோல் தோன்றியது.

வயது 29 தான். என்றாலும் உலக தார்மீக மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராகி, பல நாடுகளிலும் நல்ல செல்வாக்குப் பெற்றிருக்கிறார். பம்பாயில் 'ஹிம்மெட்' என்ற வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்துகின்றார்.

அவருடனே ஜப்பானில் நிதியமைச்சராக இருந்தவரின் புதல்வர் மசாஹிடே ஷிபுசாவும், பிரிட்டன் எம்.பி.யான பட்ரிக் வோல்ரிஜ்-கோட்டன் முதலியோரும் வருகின்றனராம்.

உலகிலே பல நாடுகளிலும் ராஜ்மோகன், பன்முறையும் சுற்றியுள்ளாரென்றால், பக்கத்திலுள்ள இலங்கைக்கு அவர் வருவது இதுவே முதல்தடவை. யாழ்ப்பாணத்துக்கும் அவர் வரவேண்டுமென்றும் அவரை நேரில் பார்க்க வேண்டுமென்றும் இங்கு பலருக்கும் ஆசை. அவர் எவ்வளவு நாள் தங்கியிருப்பாரென்று தெரியவில்லை. எப்படியும் யாழ்ப்பாணத்துக்கு வராமல் அவர் திரும்புவதாயின் அது இங்குள்ள மக்களுக்குப் பெரும் ஏமாற்றமாவதுடன், யாழ்ப்பாணத்துக்கும் அது அவமதிப்பாகும். இதுவரை பல தலைவர்கள் கொழும்பு, கண்டியுடன் நின்றுவிடுவது வழக்கம். ராஜ்மோகன் அவர்கள் அந்தத் தவறைச் செய்யமாட்டாரென்றே நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

எம். ஆர். ஏ. எனும் தார்மீக புனருத்தாரண இயக்கத்தைப் பற்றிச் சிலரிடையே ஒரு தப்பபிப்பிராயமுண்டு. அது ஒரு கிறிஸ்தவ மதமாற்றும் இயக்கமென்றும், கம்யூனிஸ எதிர்ப்பு இயக்கமென்றும் டாக்டர் என். எம். பெரேரா சமீபத்தில் இலங்கை பார்லிமெண்ட்சபையில் பேசுகையில் குறிப்பிட்டார். பௌத்தர்களை அந்த இயக்கத்தார் மதம் மாற்றுவதாக 'ஜனதின' என்ற பத்திரிகையும் எழுதியுள்ளதாம்.

இதை மறுத்து ஓர் அன்பர் ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒரு கடிதம் வெளியிட்டுள்ளார். எம். ஆர். ஏ. என்பது கம்யூனிச எதிர்ப்பு இயக்கமோ அல்லது மேற்கு நாடுகளை ஆதரிக்கும் இயக்கமோ அல்லவென்றும், முதலாளித்துவ சுயநலத்தையும், கம்யூனிஸ வெறுப்பு துவேஷங்களையும் இது கண்டிருப்பதாயும், யாரையும் மதம்மாற்றுவது அதன்நோக்கமல்லவென்றும், நேர்மை, அன்பு,

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிபட்ட 14 காஷ்மீர் கிராமங்களில் மக்கள் மகிழ்ச்சிக் கோலம்

## 17வருட ஆட்சியில் சொல்லொணு துன்பம் அனுபவித்தார்களாம்

### புதிய வெற்றிகுறித்து சவானுக்கும் சௌத்ரிக்கும் மன்னர் பாராட்டு

ஸ்ரீநகர், ஆக. 31

ஊரி பகுதிக்கப்பால் இந்தியப் படைகள் பிடித்த 14 அஸாத் காஷ்மீர் கிராமங்களில் கோலாகலக் காட்சிகள் தென்படுவதாயும் மக்கள் மகிழ்ச்சியும், உற்சாகமும் கொண்டிருப்பதாயும், இந்தியப்படைகளுடன் அவர்கள் மனமுவந்து ஒத்துழைப்பதாயும் நேரில் கண்ட நிருபர்கள் அறிவித்தனர்.

நேற்று காஷ்மீர் உள் நாட்டு மந்திரி இத்தகைய கிராமங்களில் 7க்கு விஜயம் செய்து நிலைமையைப் பார்வையிட்டார், அங்குள்ள 5000 மக்கள் ஏழ்மையிலும், வறுமை, நோய் ஆகிய துன்பங்களினுலும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

### கண்ணீர் உகுத்தனர்

5000 மக்களுக்கு ஒரு ஆஸ்பத்திரிகூட இருக்கவில்லையென்றும், அங்கிருந்த ஒரு பள்ளிக்கூடம்கூட பல வருடங்கள் இயங்கவில்லை என்றும், பல்லாண்டுகளாகதாங்கள்பட்ட கஷ்டங்களை அவர்கள் மந்திரியிடம் கூறிக்கண்ணீர் உகுத்ததாயும் நிருபர்கள் அறிவித்தனர். நோயினுல் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தார்களாம். ''அஸாத் ஹிந்துஸ்தான் நீடூழிவாழ்க'' என கோஷமிட்டு அவர்கள் காஷ்மீர் மந்திரியை வரவேற்றனர்.

மந்திரி அவர்களிடையே பேசுகையில், விடுவிக்கப்பட்ட மக்கள் ஜம்மு காஷ்மீர் மக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், ஜம்முகாஷ்மீரின் சுபீட்ச வாழ்வில் இனி அவர்களும் பங்குகொள்வார்கள் என்றும் கூறினுர்.

### "சரியான பதிலடி"

காஷ்மீர் முதல் மந்திரி திரு. ஸாதிக் நேற்றுப் பேசுகையில், இந்தியத் துருப்புக்கள் ஊடுருவாளர்களுக்கு சரியான பதிலடி கொடுத்திருப்பதாயும், பாகிஸ்தானுக்கு இது நல்ல படிப்பினை என்றும் குறிப்பிட்டார். ஆக்கிரமிப்பாளர்கள் நகர முடியாதபடி எல்லாப்பாதைகளும் அடைக்கப்பட்டு விட்டன என்றும், இந்தச்சம்பவம் ''பாகிஸ்தானின் படையெடுப்பு'' என சரித்திரத்தில் இடம்பெறும் என்றும் மேலும் அவர் குறிப்பிட்டார்,

### கவர்னர் பாராட்டு

காஷ்மீரில் பெற்றுள்ள புதிய வெற்றியைப் பாராட்டி, கவர்னர் கரன்சிங் திரு. சாவனுக்கும், ஜெனரல் சௌத்திரிக்கும் பாராட்டுத் தந்திகள் அனுப்பியிருக்கிருர்.

ஊரி — பூஞ்ச் வளைவில் சிறிய சிறிய இலக்குகளைத் தவிர எல்லா முக்கிய இலக்குகளையும் இந்தியத் துருப்புக்கள் கைப்பற்றிவிட்டதாயும், ஊடுருவல்காரர்களைத் தேடிப் பிடிக்கும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருவதாயும் டில்லியில் அறிவிக்கப்பட்டது, பாகிஸ்தானியர்களுடன் பல மோதல்கள் இருந்தபோதிலும் பெரிய சண்டை எதுவும் நடக்கவில்லை என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

### யுதாண்ட்

நியூயோர்க்கில் ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் ஐ. நா. பிரதம பார்வையாளர் ஜெனரல் நிம்மோவைச் சந்தித்து 5-வது தடவையாகக் காஷ்மீர்பற்றிப் பேசினுர், இன்று அவரது அறிக்கை வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'பல சண்டைகளில் இந்திய துருப்புகளுக்கு பலத்தசேதம்''

### 'காஷ்மீரின் குரல்' அறிவிப்பு

கராச்சி, ஆக. 31

கடந்த 24 மணிநேரத்தில் "விடுதலை வீரர்கள்'' இந்தியத் துருப்புக்களுடன் பல சண்டைகளில் ஈடுபட்டார்கள் என்றும், இந்தியர்களுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டதென்றும் "காஷ்மீரின் குரல்'' வானெலி அறிவித்தது. பல இடங்களில் இந்தியத் துருப்புக்கள் நிலைகுலைந்து ஓடியதாயும் அது அறிவித்தது.

### பலத்த சண்டை

இப்போது இந்தியத்துருப்புக்கள் பெருமளவில் ஒன்றுகூட ஆரம்பித்திருப்பதாயும், ஸ்ரீநகருக்கு வடக்கிலும், காஷ்மீரின் வடமேற்குப் பகுதியிலும் பலத்த சண்டை நடைபெற்றதாயும் அது கூறியது. பாலம் ஒன்று தகர்க்கப்பட்டது.

ஸ்ரீநகரிலிருந்துபல பாதைகளில் செல்லும் பஸ்களை இந்தியத் துடுப்புகள் தடை செய்துவிட்டதாயும், ஸ்ரீநகர் வைத்தியக் கல்லூரியை அவர்கள் எடுத்துக் கொண்டுவிட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

### ஸ்ரீநகரில்

அநேகமாக ஸ்ரீநகரில் ராணுவச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதைப் போன்ற காட்சிகள் தென்படுவதாயும் எல்லா சந்திகளிலும் ஆயுதம் தாங்கிய இந்தியத் துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருப்பதாயும் கூறப்பட்டது.

## வியட்னும் பற்றி நாஸர்-ரஷ்யத் தலைவர்கள் பேச்சு

மாஸ்கோ, ஆக. 31

ஐக்கியஅராபியக் குடியரசு அதிபர் நாஸர் நேற்று சோவியத் தலைவர்களுடன் வியட்னும்பற்றிச் சம்பாஷித்தார். நீண்டநேரம் அவர்கள் பேச்சு நடத்தினர் என்றும், ஏற்கனவே சீனப் பிரதமருடன் திரு. நாஸர் பேச்சு நடத்தியிருப்பதால் இவ் விஷயமாக சீனுவின் கருத்துக்களை ரஷ்யத் தலைவர்களுக்கு அவர் எடுத்துக் கூறினுர்என்றும் அறிவிக்கப்பட்டது.

கானு, யூகோஸ்லேவியா, இந்தியா ஆகிய நாடுகளைக் கலந்தபின்பு திரு. நாஸர் இதுசம்பந்தமாக அறிக்கை வெளியிடுவார் எனத் தெரிகிறது.

நேற்று தென்வியட்னுமில் அரசாங்க நிலை ஒன்றை வியட்காங்கியர்கள் பலமாகத் தாக்கி பெருஞ்சேதம் விளைவித்தனர்.

வடவியட்னும்மீது எவ்வளவு தான் குண்டுவீச்சு நடத்தினுலும் அமெரிக்காவின் சமாதான நிபந்தனைகளை அது ஏற்காது என்றும், போரில் வெற்றிபெறுவதற்காக அது எவ்வளவு குண்டுவீச்சுக்கும் இலக்காகத் தயார் என்றும் ஹானேயில் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதற்கிடையில் வியட்காங்கியர்மீது அமெரிக்கா குண்டுவீச்சைதீவிரப்படுத்தியிருக்கிறது. இனி தினமும் ''பி 52'' வெடிகுண்டு விமானங்களை அது உபயோகிக்கும்.

## சூடானில் 12 பேர் பலி

கார்டூம், ஆக. 31

சூடானில் அரசாங்கத் துருப்புக்களுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே கைகலப்புகள் நடைபெற்றிருக்கின்றன. 12 கலகக்காரர்கள் இதில் கொல்லப்பட்டனர்.

## மணிலாவில் ஜயப்பிரகாஷ்

மணிலா, ஆக. 31

1965-ம் ஆண்டுக்கான மகஸேஸே சமூகசேவைப் பரிசைப் பெறும்பொருட்டு ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் மணிலா வந்துசேர்ந்தார்.

## பத்தேசிங்

அமிர்தசரஸ், ஆக, 31

பஞ்சாபைச் சேர்ந்த இரு மந்திரிகள் சாந்த் பத்தேசிங்கைச் சந்தித்து உண்ணுவிரத யோசனையைக் கைவிடுமாறு வற்புறுத்தினர்.

## கைராட்டை

சென்னை, ஆக. 31

மகாத்மாகாந்தி பிறந்த தினமான வருகிற அக்டோபர் 2-ந் திகதி முதல் சாதாரண ராட்டையில் நூல் நூற்பவர்களுக்கு இப்போது அளிக்கப்படும் ஊதியத்தை விட இரு மடங்கு ஊதியம் வழங்கப்படும். இத்தொழிலின் மூலம் 20 லட்சம்பேர் பிழைத்து வருகிருர்கள் என்றும், அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## யு. ஏ. ஆர். அங்கீகாரம்

சிங்கப்பூர், ஆக. 31

சுதந்திர சிங்கப்பூரை ஐக்கிய அராபியக்குடியரசு அங்கீகரித்திருக்கிறது.

### 'ஆயத்தம்'

ஹாஜிபிர் கணவாயைப் பிடித்துவிட்டதாக இந்தியா கூறுவது அபத்தம் என அஸாத் காஷ்மீர் அரசாங்கம் கூறுகிறது. இந்தக் கணவாயில் நடைபெற்ற சண்டையில் பலத்த சேதத்துடன் இந்தியத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் அது கூறியது.

அல்ஜீரிய பாணியில் காஷ்மீரை விடுவிக்கும்வரை போராட்டம் ஓய்வு பெருது என்றும் அது கூறியது.

இந்தியர்கள் பெரும்பலத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். ஆனுல் இதனுல் மக்களின் எழுச்சியைநசுக்கிவிட முடியாது என்றும், அல்ஜீரியாவில் பிரான்ஸ் செய்தது போல் காஷ்மீரிலிருந்து இந்தியா வெளியேற வேண்டுமென்றும் அது கூறியது.

## காமராஜ்

புதுடில்லி, ஆக. 31

போதிய நேரம் கொடுத்தால் தென்னுட்டு மக்கள் ஹிந்தியைக் கற்றுக்கொண்டு விடுவார்கள் என்றும், தென்னுட்டில் ஆண்டு தோறும் 2 லட்சம் பேர் ஹிந்தி பரீட்சையில் ஆஜராகிருர்கள் என்றும் திரு. காமராஜ் இங்கு கூறினுர்.

டில்லி மக்கள் தென்னுட்டு மொழியைக் கற்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பனிச்சரிவில் 100 பேர் பலி

ஜெனிவா, ஆக. 31

சுவிட்ஸர்லாந்தில் ஏற்பட்ட பனிச்சரிவின் காரணமாக சுமார் 100 பேர் உயிருடன் புதையுண்டதாக அறிவிக்கப்பட்டது. பல பிரேதங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன். ஆயிரக் கணக்கான டன் பாரமுள்ள பனிக்கட்டிகள் மலையின் மேலிருந்து உருண்டோடி கீழே விழுந்து பல வீடுகளையும், வாகனங்களையும் மறைத்துவிட்ட .

## மே. வ.-கி. பாக். எல்லைபற்றி முதல்வர்

கல்கத்தா, ஆக. 31

மேற்கு வங்க-கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் நெருக்கடியை தோற்றுவிக்குமானுல் முன்போல் அது தோல்வியடையுமென மேற்கு வங்க முதன் மந்திரி திரு. பி. ஸி. சென் கூறினுர்.

இச்சமயம் ராஜ்யத்தில் வகுப்பு ஒற்றுமை இருக்க வேண்டியது அவசியமென்றும், ராஜ்யத்தின் எல்லைகள் இப்போது இடைவிடா கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும்அவர் மேலும் கூறினுர்.

அஸ்ஸாம்-கிழக்குப் பாகிஸ்தான் எல்லை 640 கிலோமீட்டர் தூரத்தை உடையதென்றும், ஊடுருவலைத் தடுக்க இங்கு கண்காணிப்புக் கமிட்டிகள் அமைக்கப்படுமென்றும்அறிவிக்கப்படுகிறது.

## டெஸ்ட் கிரிக்கெட்

லண்டன், ஆக. 31

இங்கிலாந்துக்கும், தென்னுபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து தன் 2ம் இன்னிங்ஸில் 1 விக்கெட் நஷ்டத்திற்கு 64 ரன்கள் எடுத்தது. தென்னுபிரிக்கா 2ம் இன்னிங்ஸில் 392 ரன்கள் எடுத்து அவுட்டானது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 208 ரன்களும், தென்னுபிரிக்கா முதல்இன்னிங்ஸில் 202 ரன்களும் எடுத்தன.

## சிரமதான மூலம் திருப்பணி

இணுவில், செவ்

இணுவில் தேசிய விவசாயிகள் கழகத்தின் சிரமதானத் தொண்டர்கள், உரும்பராய் கருணுகரப் பிள்ளையார் கோவில் வீதிகளை சிரமதான முறையில் நேற்று அதிகாலையிலிருந்து துப்புரவு பண்ணினுர்கள்.

சரியாக காலை 5 மணிக்கு இணுவில் இந்து வாலிபர் சங்க அங்கத்தவரான திரு. ந. குமாரசாமி மேற்படி சிரமதானத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், இணுவில் தேசிய விவசாயிகள் கழக சிரமதானத் தொண்டர்களின் நன்முயற்சியைப் பாராட்டி, இவர்களைப் போல் எல்லோரும் முன்மாதிரியாக விளங்க வேண்டுமென்று கூறினுர். சிரமதானத்தில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு கோவில் பூசகர் பிரம்ம ஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் தகுந்த உதவிகளைச் செய்துகொடுத்தார். இப்பணியில் இணுவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி ச. ச. நிலைய அங்கத்தவர்களும் பங்குகொண்டார்கள்.

## இப்படியும் நடந்தது

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் தொழிலாளி ஒருவர் திடீரெனத் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு 3 மணித்தியாலங்களின் பின்னர் திரும்பவும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளாரெனத் தெரியவருகிறது.

## ஆஸ்பத்திரி காட்சிகள்

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் மழை காரணமாக நோயாளர்கள் வெள்ளத்தில் நித்திரை செய்யவேண்டிய அவல நிலையேற்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியில் தாதிமார் தங்கும் அறைகளிலும் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

நோயாளர்கள் தங்கும் வார்ட்டுகளில் நாய்களும், கட்டாக்காலி மாடுகளும் நிறைந்திருக்கின்றன. ஆஸ்பத்திரியைச் சுற்றிப் பாதுகாப்பில்லாததால் ஆடு மாடுகள் எப்பொழுதும் ஆஸ்பத்திரி வளவைச் சுற்றித்திரிகின்றன. இதனுல் நோயாளர்கள் மிகவும் இன்னல்களுக்குள்ளாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம்மது அலிமீது தமிழரசு பிரமுகர்கள் குற்றச்சாட்டு?

திருகோணமலை, செவ்.

மூதூர் தொகுதி முதலாவது எம்- பி. திரு எம். இ. எச். முகம்மதுஅலிமீது தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மூதூர்த்தொகுதித் தமிழரசுப் பிரமுகர்கள் தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடத்திற்கு அறிவித்துள்ளனர் என அறியப்படுகின்றது.

தமிழரசு எம், பிக்கள் தமிழ்மொழியில் மட்டுமே பேசவேண்டுமென்று தீர்மானித்ததற்கு முரணாக முன்னிப்பொத்தானை என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களில் தமிழில் பேசவேண்டுமென்ற தமிழரசுத் தீர்மானத்தை திரு. முகமது அலி கண்டித்து பேசியுள்ளாரென்றும் மூதூர்த் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளை நிறுவும் நடவடிக்கைகளில் இவர் வெளியாக ஈடுபட்டு வருகிறாரெனவும் தமிழரசுத் தலைமைப் பீடத்திற்குஅனுப்பப்பட்ட முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். இதைதொடர்ந்து மூதூர் தொகுதியில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்கள்பற்றி அவர் எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லையாதெனவும் முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. முகமது அலிமீது மூதூர் தமிழரசுப் பிரமுகர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள்பற்றி அடுத்துவரும் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் ஆராயப்படலாமென்றும் தெரிய வருகிறது.

# "பணமுள்ளவர்கள் பட்டங்கள் பெறலாம் என்ற காலம் மாறிவிட்டது"

## பாராட்டு விழாவில் பேச்சு

சுழிபுரம், செவ்.

"உண்மையான உழைப்பும் பரிசுத்தமான இதயமும் உடையவனே சேவையாளன். பணமுள்ளவர்கள் பட்டங்கள் பெறலாம்; பதவிகள் வகிக்கலாம் என்றிருந்தகாலம் மாறி, யார் உண்மையான சேவையாளன் என்பதை பொது மக்களே அரசாங்கத்துக்குசிபார்சு செய்து நியமிக்கும் காலம் இது" என்று வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மூளாய் பிள்ளையார் கோவில் முன்றிலில் மூளாய் மக்களால் புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட திரு. இ. தம்பையாவை பாராட்டுமுகமாக நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் தான்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:— அரசாங்கத்தால் பட்டங்கள் வழங்கப்படுவது மக்களுக்கு அவர்கள் செய்தசேவையின் நிமித்தமே என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். சமாதான நீதவானகப் பட்டம் பெற்றவர்கள் எத்தனையோபேர் அதை ஓர் தொழிலாகப் பயன்படுத்தி ஏழைமக்களிடம் ஒரு கையொப்பத்துக்கு ஒரு ரூபா வீதம் வாங்கியதை நான் நன்குஅறிவேன். தமிழ்இனத்தின் நெறி நேர்மையானது; நீதியானது என்பதை வள்ளுவன் குறள்ஒன்றே நமக்கு எடுத்துக் காட்டுகிறது. சேவை மனப்பான்மையுடையவர்கள் மேலும் சேவை செய்வதற்கு அரசாங்கம் வழங்கும் பட்டங்களுடன் மட்டும் நின்றுவிடாது தமது சேவையை நேர்மையுடன் செய்யவேண்டும்".

யாழ்ப்பாண தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. டி. டபிள்யூ. செல்வரத்தினம் பேசுகையில், பல பொதுசேவை ஸ்தாபனங்களில் சேவையாற்றும் தம்பையா சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டது பாராட்டப்படவேண்டும் என்றார்.

மூளாய் கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. சி. மயில்வாகனம் பேசுகையில், கடவுள் பக்தியும், உண்மையான தொண்டும் உடைய ஒருவர் எமது கிராமத்தில் உண்டென்றால் அவர் திரு. தம்பையாதான் என்று சொன்னார்.

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு, கந்தசுவாமி, ச. கயிலாயபிள்ளை, மு. கணபதிப்பிள்ளை, சி. கார்த்திகேசு, அ. தையல்பாகர், க. விநாயகமூர்த்தி உட்படமற்றும்பலர்பாராட்டுரை வழங்கினர். திரு. இ. தம்பையா பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

# திருடர் கோஷ்டியின் அட்டகாசம்

பருத்தித்துறை, செவ்.

கரணவாய், புலோலி தெற்கு ஆகிய பகுதிகளில் நடமாடிய திருடர்கள் கோஷ்டி இப்போது புலோலி மேற்குப் பகுதியில் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது.

புலோலி மேற்கில் ஒரே இரவில் பல வீடுகளில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட திருடர் கோஷ்டி ஒரே ஒரு வீட்டில் மாத்திரம் சங்கிலி ஒன்றையும் பிறிதோர் வீட்டில் சில பாத்திரங்களையும் களவாடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடர்கள் மிகவும் சக்தி வாய்ந்த டோச்லைட் உதவியால் பிடிக்க வரும் நபர்களது கண்களைக் கூசச் செய்து ஓடி மறைந்துவிடுகிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

பருத்தித்துறைப் பொலிசார் இப்பகுதியில் ரோந்து வருவதில் தீவிர கவனம் எடுத்து வருகின்றனர்.

புலோலி மேற்கு கிராம சேவகர் திருடர்களின் நடமாட்டத்தைக் கவனிக்க தொண்டர்படையொன்றைத் திரட்டியுள்ளார்.

இத்தொண்டர்படையினர் இரவில் ரோந்து வருவதுடன் நின்றுவிடாது பகல் வேளையிலும் சந்தேகத்துக்கிடமான அன்னியர்களின் நடமாட்டம் பற்றியும் கவனம் செலுத்துவதாகவும் கூறப்படுகிறது.

# மாணவர் மீது வழக்கு

## காரை திருட முயன்றனராம்

யாழ்ப்பாணம், புதன்

பாடசாலை மாணவர்களான மூவரின் கைவிரல் அடையாளங்களும் உள்ளங்கை அடையாளங்களும் மெர்க்கண்டைல் வங்கி மனேஜரின் காரில் காணப்பட்ட அடையாளங்களுடன் பொருந்தக்கூடியதாக விருந்தது என்று கைவிரல் அடையாள பதிவு காரியஸ்தர் திரு. இரத்தினம் பொன்னுத்துரை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் சாட்சியமளிக்கும் பொழுது கூறினார்.

இவ்வழக்கில், பாடசாலை மாணவர்கள் மூவர் குறிப்பிட்ட வங்கி மனேஜர் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து அவருக்குச் சொந்தமான மோட்டார் காரை திருடமுயற்சித்ததாக யாழ்ப்பாண பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகளின் சார்பில் திரு. ஜிம்மி ராசரத்தினம் அஜரானார். மேல்விசாரணை அடுத்தமாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# இலவச பயிற்சி

கிளிநொச்சி, செவ்.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க ஆதரவில் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் உள்ள காந்திநிலையத்தில் நெசவுவேலை, தும்புவேலை, மரவேலை ஆகிய துறைகளில் இளைஞர்களுக்கு இலவசமாகப் பயிற்சியளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி சுமார் 2 வருடகாலம் நீடிக்கும். பயிற்சியின்போது விவசாயமும் ஒருபாடமாகக் கற்பிக்கப்படும். பயிற்சி முடிவில் தராதரப்பத்திரம் வழங்கப்படும். பயிற்சியில் திறமை காட்டுபவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி விசேஷ பயிற்சி அளிக்கவும் திட்டமுண்டு.

பயிற்சி முடிவடைந்ததும் தனித்தோ அல்லது கூட்டுறவுமுறையிலோ தொழிலைத் தொடர்ந்துசெய்ய காந்தி சேவாசங்கம் வழிவகைகளை ஏற்படுத்தும்.

# மீண்டும் திருட்டு முயற்சி

உடுப்பிட்டி, செவ்,

கரணவாய் சோளங்கன் காடன் வளவு என்னுமிடத்தில் திருடர்கள் புகுந்ததாகவும் திருடரின் நடமாட்டத்தை அறிந்த வீட்டுக்காரர் சத்தமிட்டதும் திருடர்கள் ஓடிவிட்டதாகவும் தெரியவருகிறது. கடந்த சில வாரங்களுக்குமுன் இப்பகுதியில் திருடர்களின் சேஷ்டை அதிகரித்ததும் தொண்டர்படையினர் உஷார் நிலையில் இருந்ததால் திருடர்கள் தொல்லை குறைந்திருந்தது. இப்பகுதியில் நிரந்தரமான பொலிஸ் பாதுகாப்பு அவசியம் என்பதை மக்கள் வலியுறுத்தியுள்ளனர். இங்கும் முதலைக்குளி என்னுமிடத்திலும் திருடர்களின் நடமாட்டம் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

"வடக்கு, கிழக்கு பகுதிகளில்

# தமிழ் மொழிச் சட்டம் விரைவில் அமுலாக்கப்படும்"

## மந்திரி திருச்செல்வம் உறுதி

மன்னார், செவ்.

"தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் வேண்டுகோளின்படி தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாக தேசிய அரசாங்கத்தின் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவால் நான் மந்திரியாகநியமிக்கப்பட்டேன். எனக்கு அளிக்கப்படும் வரவேற்பு, கௌரவம் தமிழ்பேசும் மக்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு, கௌரவமாகும்."

மன்னார் பட்டினசபை மண்டபத்தில், பட்டினசபைத்தலைவர், அங்கத்தவர்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்,

மந்திரிகளுக்கு நீங்கள்அளிக்கும் மரியாதை நீங்கள் உங்களுக்கே அளிக்கும்" மரியாதை என்பதை மனதில் வைத்திருக்க வேண்டுமென்றும் மந்திரிதமது பேச்சில் குறிப்பிட்டார்.

"இடதுசாரிகள் நாட்டின் பலபகுதிகளுக்கும் சென்று இந்நாடு தமிழர்களுக்கு விற்கப்பட்டு விட்டது என்று வகுப்புவாதம்பேசிவருகிறார்கள். ஆனால் தமிழரசுக்கட்சி இவ்வருடம் மார்ச் 24-ம் திகதி அவர்களுடன் சேர்ந்துகொண்டிருந்தால் அவர்கள் வகுப்புவாதத்தை விட்டுபுதியதொரு 'வாதம்' செய்திருப்பார்கள்" என்றும் திரு. திருச்செல்வம் கூறினார்.

நாம் வாழும் பகுதிகளில் நமது தாய் மொழியான தமிழ் நிர்வாகமொழியாக்கப்படும் வரை நாம் மானத்துடன் வாழமுடியாதென்றும் விரைவில் அச்சட்டம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமுலாக்கப் படுமென்றும் அவர் உறுதி கூறினார்.

இந்நாட்டிலுள்ள மக்கள் சகலரும் தமது உரிமைகளுடனும், மானத்துடனும் வாழ்வதற்கு வழிவகுப்பதையே தேசிய அரசாங்கம் தனது தலையாய கொள்கையாகக் கொண்டிருக்கிறதென்றும், எந்த இனத்தையும் பாரபட்சமற்ற முறையில் நடத்துமென்றும் திரு. திருச்செல்வம் உறுதி கூறினார்.

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பரணம், புதன்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தின் ஆதரவில் யாழ் நகரசபை மண்டபத்தில் பொதுக்கூட்டம்ஒன்று செப்டம்பர் மாதம் முதலாந் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜெயவீர தலைமையில் நடைபெறும்.

இஸ்ரேல்தூதுவர் திரு. ஜி. ஷாஉல் றமாதி 'ஸ்ரேல் நாட்டின் விவசாயப் பிரச்னைகள்' என்ற தலைப்பில் பேசுவார்.

# மறைவுக்கு அனுதாபம்

'இணுவில் இந்து வாலிபர் சங்கத்தினர், சைவப்பெரியார் திரு. சேர் கந்தையா வைத்தியநாதனின் மறைவைக் கேட்டவுடன் அதிர்ச்சியடைந்தார்கள். அவர் தமிழுக்கும், சைவத்திற்கும் அரும் பணியாற்றினார்' இவ்வாறு இணுவில் இந்து வாலிபர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் கூட்டிய கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. க. வேதநாயகம் கூறினார். அன்னாருக்கு அஞ்சலிசெலுத்துமுகமாக கூட்ட ஆரம்பத்தில் இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அவரின் சேவைகளைப் பற்றி திரு. செ. இலகுநாதன், திரு. செ. செல்வரத்தினம், சங்கச் செயலாளர் திரு. பரமநாதன் ஆகியோர் பேசினார்கள். அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், புதன்

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் பொதுக்கூட்டம் திரு. வை. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவரும் சைவப் பெருமகனுமாகிய சேர். கந்தையா வைத்தியநாதனின் ஆன்மா சாந்தியடையவேண்டும் என சிலநிமிடநேர மௌனப் பிரார்த்தனை நடைபெற்றது,

"சேர். கந்தையா வைத்தியநாதனுக்கு நாம் நன்றி செலுத்துவதானால் திருக்கேதீஸ்வரத் திருப்பணியை நிறைவேற்றச் செய்வதே சைவ மக்கள் அனைவரின் தலையாய கடமையாகும், இதனைச் சைவத் தமிழ் உலகம் நன்கு உணரவேண்டும்" என சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

'தமிழர்தம் தவப்பயனும் கேதீச்சரநாதனின் பெருந்தொண்டருமான சேர் கந்தையா வைத்தியநாதன் பிரிந்தமை குறித்து அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் ஆழ்ந்த கவலையுறுகின்றது. அவர்களது ஆத்மா சாந்தியுறுவதாக' என அண்ணாமலை இசைத் தமிழ் மன்றச் செயலாளர் திரு. ஆ. நமசிவாயம் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், புதன்

அகிலபிராமண குரு சமூக சேவா சங்கக் காரியதரிசி, திருக்கேதீஸ்வரத் திருப்பணித்தொண்டன் சேர் கந்தையா வைத்தியநாதனின் மறைவு குறித்து ஓர் அனுதாபச்செய்தியை திருமதி புவனேஸ்வரி வைத்தியநாதனுக்கு அனுப்பியுள்ளார்.

மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents:
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது

## இரசாயன அறிவை அளவிடுங்கள்

(G. C. E. - O L. பரீட்சைக்குரியது)

ஆசிரியர்கள்: ம. பரமானந்தன், B, Sc.
அ. குலேந்திரன், B. Sc.
பொ. மனோகரன் B. Sc.

- புதிய பாடத் திட்டத்திற்கு அமைந்த சிறந்த துணை நூல்.
- மாணவர்கள் முழுப்பாடத்திட்டத்தையும் மீட்டிக் கொள்வதற்கு ஏற்ற ஒரே நூல்.
- ஏறக்குறைய 1500 தேர்ந்தெடுக்கும் புதுமுறை விஞக்களையும், 40 வியாசவினுக்களையும் அவற்றின் விடைகளையும் கொண்டது.
- 1965-ம் ஆண்டு மார்கழி மாதப் பரீட்சைக்கு வரக்கூடிய 5 மாதிரி விஞப்பத்திரங்களையும் அவற்றின் விடைகளையும் கொண்டது.

விலை ரூபா 5-25

கிடைக்குமிடம்:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

235, K. K. S. வீதி, : யாழ்ப்பாணம்.



**The Jaffna Academy**

(Chundikuli)

Reopens on Monday. 6th September 1965

All fees for the new term must be paid on the day of the Term and Admission Cards obtained

828 Director


## கிரீஸ்

ஏதென்ஸ். ஆக, 31

கிரீஸின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் விஷயத்தில் முடிக்குரிய வழக்கறிஞரின் ஆலோசனையை நாடும்படி பிரதமர் சிரிமாகோஸ் மன்னருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Alain Delon
in
PURPLE NOON
(Color) Adults Only)


## உதவி பொலிஸ் அதிபர்

காங்கேசன்துறை, செவ்.

வடபகுதிக்கு விஜயம் செய்த உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஈ. எல். அபயகுணவர்த்தன உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பின், மன்னார், தலைமன்னார், வவனியா பொலிஸ், சட்டவிரோதக்குடியேற்றப் பொலிஸ், ஆனையிறவு தடுப்பு முகாம் முதலியவற்றைப் பார்வையிட்டு, யாழ்ப்பாணத்திற்கு வந்த பின் ஊர்காவற்றுறைப் பொலிஸ் சுங்கானைப் பொலிஸ், சுன்னுகம் பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு விட்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலிஸ் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். பின் போட்டி முடிந்ததும் கோப்பாய் பொலிஸ் நிலையம், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றைப்பார்வையிட்டு நெடுங்கேணி வழியாகக் கொழும்பு சென்றார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்

**சிவாஜிகணேசன், சாவித்திரி**
**எஸ். எஸ் ராஜேந்திரன்**
**கே. ஆர். விஜயா**
நடிக்கும்

**கைகொடுத்த தெய்வம்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)

ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சார்ந்தவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான் - "நானும் மனிதன்தான்"

விஜயபுரி வீரன் புகழ் **ஆனந்தன்-சந்திரகாந்தா**
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்

ஆனந்த மூவிஸ்

**நானும் மனிதன்தான்**


# நாட்டின் சுபிட்சத்துக்கு உழைத்தவர் வைத்தியநாதன்

## கொழும்பில் அஞ்சலி

பம்பலப்பிட்டி, செவ்.

"நம்மை விட்டுப் பிரிந்த சேர் கந்தையா வைத்தியநாதன் காலஞ்சென்ற பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் நம்பிக்கையைப்பெற்றிருந்தார். சிங்கள பிரதம மந்திரிக்கு, இப்படியொரு தமிழ் ஆலோசகர் இருந்தபடியால்தான் நாட்டில் அமைதி நிலவியது. இதிலிருந்து நாட்டின் நன்மைக்கு—சிங்கள தமிழ் ஒற்றுமை எவ்வளவு அவசியமென்று அறியலாம்,

சரஸ்வதி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை காலஞ்சென்ற சர் கந்தையா வைத்தியநாதனுக்குஅஞ்சலி செலுத்துமுகமாக நடைபெற்ற கூட்டத்தில், முதலியார் வாரியபொல மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம், இந்து சமய, தமிழ் வளர்ச்சி சபைகளின் ஆதரவில் நடைபெற்றது.

திரு. டி. எஸ். சேனநாயக்கா, தமது பதவியை சிறப்பாக வகித்து, நாட்டில் சுபிட்சம் ஏற்படக் காரணமாயிருந்தவர், சர் கந்தையா வைத்தியநாதன் தான் என்று முதலியார் வாரியபொல மேலும் கூறினார்.

திரு. இராமச்சந்திரன் தமதுதலைமையுரையில், அவரின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும், சமயத்திற்குச் செய்த சேவைகளையும் விரிவாகக் கூறினார்.

திரு. கே. ஆழ்வாப்பிள்ளை பேசும்போது, அரசாங்க துறையில்தான் அவருடன் கூட வேலை செய்யும்போது பெற்ற அநுபவங்களை விளக்கிக் கூறினார்.

விவேகானந்த சபை, கொழும்பு தமிழ் மன்றம் ஆகியவற்றின் தலைவர் திரு. எம். வைரவப்பிள்ளை அவர் தமிழுக்கும், சைவத்திற்கும் பல்வேறு துறைகளிலும் ஆற்றிய சிறப்பான பணிகளை, விசேஷமாக திருக்கேதீஸ்வர திருப்பணியில் ஈடுபட்ட விபரத்தை விளக்கி கூறினார்.

திரு. வி. எப். குணரத்தின, அவரதுசமரச ஞானத்தையும், இந்து சமயத்திலுள்ள ஆழ்ந்த பற்றையும் எடுத்துக் கூறினார்.

திரு. ச. அம்பிகைபாகன் பேசுகையில், திருக்கேதீஸ்வர திருப்பணி வேலையில் அவரின் ஈடுபாட்டை எடுத்துக்காட்டும் சில சம்பவங்களை கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பஜனை மூலம் வீடுவீடாகச் சென்று திருக்கேதீச்சர திருப்பணிக்கு பணம் சேர்த்தபொழுது அவர் முக்கிய பங்கெடுத்துக்கொண்டதையும், லேடி. வைத்தியநாதன், அவரின் சமயப்பணிக்கு அதிக ஒத்தாசையாயிருந்தார் என்பதையும், திரு. அம்பிகைபாகன் எடுத்துக் கூறினார்.

சிவாலய திருப்பணிச் சபை யாழ். கிளை தலைவர் திரு. சின்னையா பேசும்போது, தனிமனிதர் ஒருவர் சர் கந்தையா வைத்தியநாதனின் இடத்தை நிரப்ப முடியாதபடியால், இவ்வேலையில் பலரும் சேர்ந்து உழைக்கவேண்டிய காலம் வந்துவிட்டதென்று கூறினார்.

நோய் கண்ட நேரம் தொடக்கம். அவரது ஆவி பிரியும்வரை, கூட இருந்த திரு. ஞானசம்பந்தன், அவரின் கடைசி நேரத்தைப் பற்றி உருக்கமாகவும் விரிவாகவும் கூறினார்.

படுத்த படுக்கையில் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிற நேரத்திலும், அங்கு [illegible] திரு. எம். திருச்செல்வத்தின் வசதிகளைக் கவனிக்குமாறு, வற்புறுத்திய அவரின் செயலை, அதனால் வெளிப்படுத்திய பண்பை எடுத்துக் கூறினார்.

கடைசிநேரத்தில் படுக்கையில் சிவன்முத்திரை கோலத்தோடு இருக்கும்போது, அவரின்ஆவி பிரிந்த நிலையைக்விளக்கிக்கூறினார்.

சுவாமி சச்சிதானந்தர் மற்றும் பலர் பேசினார்கள்.

⁂ ⁂ ⁂

குரும்பசிட்டி, செவ்.

குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச்சங்கத்தின் 8வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. தா. இளையதம்பி தலைமையில் நடைபெற்றபோது சைவப்பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதனின் மறைவுக்கு 2 நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில், பண்டிதர் வ. நடராஜன், சிவபதமடைந்த சைவசீலர் வைத்தியநாதனின் சைவ சமய, தமிழ்க்கலாசாரத் தொண்டுகளை எடுத்துக்கூறினார். சபையில் அன்னாரின் மரணம் குறித்து அவரது குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதெனவும்தீர்மானிக்கப்பட்டது,

புதிய நடப்புவருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. தா. இளையதம்பி. உபதலைவர்: திரு. வ. கந்தையா. இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் அ. மாணிக்கவாசகர், இ. மகேசன். தனதிகாரி: திரு. வி. இராசரத்தினம். நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் மு. அப்பாத்துரை, மூ. கந்தையா, வ. நடராஜா, வ. தம்பிராசா, கு. பொன்னுத்துரை, ந. சேனாதிராஜா, கணக்குப்பரிசோதகர்: திரு. சி. வன்னியசிங்கம்.

⁂ ⁂ ⁂

சுழிபுரம், செவ்வாய்

"சைவ சமயத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதனின் திடீர் மறைவு சைவசமயத்தவர்களுக்கு பெரும் இழப்பாகும். அவருடைய நஷ்டத்தை சைவ உலகம் ஈடு செய்ய முடியாது. அவருடைய குடும்பத்தினர் துயரில் நாமும் கலந்து எமது ஆழ்ந்த துயரை தெரிவிக்கின்றோம்" என வழக்கம்பரை இந்து இளைஞர் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அவரின் குடும்பத்தினருக்கு அனுப்பியுள்ளது.




## கொழும்பு

புதன் 1-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

### 344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

### 344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-15 பேச்சு, 7-30 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்தஇசை.


### கல்வி

கரவெட்டி, வாணி கலைக் கழகத்தின் ஆதரவில் வர்த்தக கல்வி நிலையத்தில் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள் இலவசமாகப் போதிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்க. வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 916

### விற்பனைக்கு

மண்ணெண்ணெயில் இயங்கும் குளிர்சாதன இயந்திரம் (நடுத்தரம்) Refrigerator. இருக்குமிடம்: V. சிவகுருநாதன், கணேஸ் பேக்கரி, உடுப்பிட்டி. 952

நீர்வேலி வடக்கு, மாசுவன் சந்திக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சி. சோமசுந்தரம், தபால் நிலையம், நீர்வேலி. 954

### விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

அளவெட்டி வடக்கு கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: நாகரட்ணம் பத்மநாதன், கோண்டாவில் கிழக்கு. 960

### தேவை

நாவற்குழி ஆலாத்தி வெளி தென்னந்தோட்டத்தில் கட்டாக்காலியாக வரும் மாடுகளைப் பிடித்து கிராமசபையாளரிடம் கொண்டுசென்று கொடுப்பதற்கு மாடு பிடிப்பதில் அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் மேற்படி தோட்டத்தில் நேரடியாய் வந்து சந்திக்கவும். விபரம் நேரில் அறியலாம். அ. அமிர்தவல்லி அம்மாள், தோட்ட முகாமையாளர். 961

### WANTED

a [illegible] young lad 15-20yrs. age with knowledge of Physics and English to undertake plumbing and electrical wiring Previous experience not essential. Apply in writing to Nandhi Industries and agencies Ltd 20 Stanley Road, Jaffna. 962


## விடைத்தாள்கள் தட்டுப்பாடு?

கோண்டாவில், செவ்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜி. சி. ஈ. பௌதீகவியல் பரீட்சை நடந்துகொண்டிருக்கும்பொழுது யாழ்ப்பாணத்தில் ஒரு பரீட்சை ஸ்தானத்தில் பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு வேண்டிய போதிய விடையெழுதும் தாள்கள் பற்றாக்குறையேற்பட்டதால் பரீட்சார்த்திகள் சுருக்கம் எழுதும் தாள்களில் விடை எழுதியதாகவும், ஆனால் இந்தத் தாள்களும் பற்றாமல்போகவே கல்லூரியினின்றும் தாள்கள் எடுக்கப்பட்டு பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கப்பட்டன என்றும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவ தாக்குதல் வழக்கில் 15 எதிரிகள் விடுதலை

## 4 எதிரிகளின் வழக்கு மாவட்ட நீதிமன்றத்துக்கு தாக்கல்

சாவகச்சேரி, திங்கள்

இயக்கச்சி இராணுவமுகாமைச்சேர்ந்த 19 இராணுவத்தினர்மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் 15 எதிரிகளை விடுதலை செய்தும் மற்றும் 4 எதிரிகளை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறும் உத்தரவிட்டு வழக்கை விசாரித்தசாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஹெபேட் சில்வா தீர்ப்பளித்தார்.

இன்றுகாலை நீதிமன்றம் கூடியபோது எதிரிகளின் சார்பில் ஆஜரான திரு கே.வி. எஸ். சண்முகநாதனும், முடிக்குரியதரப்பில் ஆஜரான திரு. ரஞ்சித் அபயசூரியாவும் தொகுப்புரை நிகழ்த்தினர். தீர்ப்பு வழங்குவதற்காக பிற்பகல் 2 மணிக்கு நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு நீதிமன்றம் கூடியபோது நீதிபதி தமது தீர்ப்பை வழங்கினார். 1ம் எதிரி உட்பட 15 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். மற்றும் 2-ம், 3-ம், 4-ம், 5-ம் எதிரிகளை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது. இவர்கள் தலா 250 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்தலெப்டினள்ட்எச்.குமாரசாமி உட்பட 19இராணுவத்தினர் மீது 5-7-64ல் சட்டவிரோதமாக கூட்டம் கூடி குழப்பம் செய்ததாகவும் தாளையடி கிராம வாசிகள் சிலரை அடித்து காயம் விளைவித்ததாகவும், சிலரின் உடைமைகளுக்கு சேதமும், நஷ்டமும் விளைவித்ததாகவும், அருளம்பலம் பத்திநாதர் என்பவருடைய காருக்கு 2000 ரூபா வரையான நஷ்டம் உண்டுபண்ணியதாகவும் பளைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு சென். பி. லெபிரோயினால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் திரு. வி. பாலகிருஷ்ணன் உதவியுடன் திரு. கே. வி. சண்முகநாதன் ஆஜராஞர்.

கடந்த இரண்டு மாதங்களாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்ட இந்த வழக்கின் இறுதி நாளான இன்று மாணவர் உட்பட பெருந்திரளான மக்கள் கூட்டம் நீதிமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கூடியிருந்தது.

## சதிவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

கொழும்பு பிளேக்ஸ்டார்வ் வீதியில் 3 நீதியரசர்களின் முன்னிலையில் நடைபெறவிருந்த 2-வது புரட்சி சதியின் 2-ம் விசாரணை, வருகிற டிசம்பர் மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. உயர் நீதிமன்ற தீர்ப்புக்கெதிராக பிரிவில் கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டிருப்பதால், தீர்ப்பு வழங்கப்படும்வரை விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என எதிரி தரப்பு வழக்கறிஞர் கோரினர். அரசாங்க வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவிக்காததால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## தப்பிச் செல்லும் பாதை அடைபட்டது

ஸ்ரீநகர், ஆக. 30

ஹாஜிபீர் கணவாயையும், ஊரி பூஞ்ச் பகுதியில் 7 பாகிஸ்தான் இலக்குகளையும் இந்தியத் துருப்புகள் பிடித்திருப்பதால் பாகிஸ்தானியரின் முக்கிய நுழைவுப் பாதையையும் தப்பிச் செல்லும் வழியையும் அவர்கள் அடைத்துவிட்டார்கள் எனக் கூறப்பட்டது. 200 சதுர மைல் கொண்ட இப்பிரதேசத்தில் 800 முதல் 12000 அடி உயரத்தில் பல பாகிஸ்தான் நிலைகளும், தளங்களும் இருந்தன.

## "பிஞ்சு உள்ளங்களில் சமய பக்தியைப் பதியச் செய்தவர்"

யாழ்ப்பாணம், புதன்

யாழ். இந்துக் கல்லூரி இந்து வாலிபர் சங்கத் தலைவர் நேற்று முன்தினம் சேர் கந்தையா வைத்திய நாதனின் மறைவு குறித்து கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"பாண்டியனுக்கு ஒரு அமைச்சராயிருந்து பாண்டிநாட்டிலே மீண்டும் சைவம் தழைக்கப் பாலருவாயராகிய ஆளுடைப்பிள்ளையாரை அழைத்துவந்தவர் குலச்சிறை நாயனார் என்று சரித்திரத்தாலறிகிறோம். அது ஆறும் நூற்றாண்டுச் சம்பவம். இன்று இருபதாம் நூற்றாண்டு. அமைச்சராயிருந்து, அரசியலின் உச்சியிலே பதவிவகித்த தமது செல்வாக்கினையெல்லாம் பாழடைந்திருந்த கேதீச்சரநாதன் கோயிலையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் புனித பூமியாக்கினார்.

"பாடசாலைகளில் உள்ள மாணவர்களைக் கொண்டே திருவிழாக்களைச் செய்வித்து அவர்களுடைய பிஞ்சு உள்ளத்திலே சமய பக்தியைப் பதியச் செய்தவர் சேர் கந்தையா வைத்தியநாதன். தீர்த்தக் காவடி எடுக்கும் பாடசாலை மாணவர்களுடன் தாமும் ஒருவராகப் பாலாவியிலிருந்து ஈரவேட்டியுடன் தீர்த்தக் குடத்தைத் தலைமேற் சுமந்து கொண்டு வீதியெல்லாம் நம்மோடு சேர்ந்து அபிஷேகம் செய்து நமக்கெல்லாம் வழிகாட்ட இனி யார் இருக்கிறார்?"

(5-ம் கலத் தொடர்சி)

தியான600ஆயுதங்கள்செட் வாங்கப்பட்டது. ஆனல் இந்த ஆயுதங்கள் பஸ்களில் கொண்டு செல்லப்படுவதில்லையென்றும், இவ்வாயுதங்கள் அவசியப்படுவதில்லையென்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### தமிழிலும் வெளியாகும்

அரசாங்க கணக்குகள் பற்றிய ஆடிட்டர் ஜெனரல் திரு, பி. எல். டபிள்யூ. பெர்னாண்டோவின் இவ்வருட அறிக்கை, தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும்.

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை தமிழிலும் வெளியிடப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## சண்முகதாசனின் சுற்று நிருபம்

பம்பலப்பிட்டி, செவ்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளன பொதுக் காரியதரிசி திரு. எஸ். சண்முகதாசன் 21 கோரிக்கையின் கீழ் ஒன்ருக நின்ற தொழிற் சங்கங்கள் அனைத்தையும் ஒன்று சேரும்படியும், தொழிற் சங்கங்களின் விரோதியான ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலையையும் பிற தொழிற் சங்கங்களுக்கு ஒரு சுற்று நிருபம் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்திலிருந்து விலகிச் சென்று, வேறு சங்கங்களை அமைத்த அங்கத்தவர்களை மீண்டும் தங்கள் சங்கத்தில் சேரும்படியும் திரு. சண்முகதாசன் அச்சுற்று நிருபம் மூலம் அழைத்துள்ளார்.

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கொடியேற்று விழா இன்று ஆரம்பமாகிறது. பிரம்மஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள் விழாக் கிரியைகளை நடாத்திவைப்பார்.

இருபதினாயிரம் ரூபாசெலவில் சித்திரவேலைப்பாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய தேர்க்கொட்டகைத் திறப்பு விழா, தேர்த்திருவிழாவன்று நிகழவிருக்கின்றது,

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தூய்மை, சுயநலமின்மை இக் கொள்கைகளை மக்கள் பரிபூரணமாகக் கைக்கொண்டு, தெய்வநம்பிக்கையுடன் வாழும்படியே அவர்கள் கேட்பதாகவும் அந்த அன்பர் எழுதுகிறார்.

யாருக்கும் அது விரோதமல்லவென்றும், மக்களின் மனதை மாற்றி, ஒரு புதிய புரட்சி உண்டாக்குவதே அதன் நோக்கமென்றும், குறிப்பிடுகின்றார்.

ராஜமோகனின் விஜயம், இதுபற்றிய பல தப்பெண்ணங்களையும் தீர்த்து, இங்கு பொதுவாழ்வு தூய்மைப்படவும் உதவவேண்டும்.

ஃ ஃ ஃ

பரியர் நுண்ணியர்
பார்த்தற்கரியவர்,
அரிய பாடலர்
ஆடலரன்றியும், கரிய
கண்டத்தர் காட்சி
பிறர்க்கெலாம், அரிய
தொண்டர்க் கெளியர்
ஐயாறரே

—அப்பர் சுவாமிகள்

## சமூகசேவை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகப் போதிக்கப்படுகின்றது. மேற்கு ஜெர்மன் தேசத்தில் 14 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தொழில் துறையில் விசேஷ பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது. அண்மையில் கல்விமந்திரி அறிவித்துள்ளதுபோல பாடசாலை மாணவர்கள் வயல் வேலைசெய்ய அனுமதிக்கப்படவிருக்கும் திட்டம் வரவேற்கத்தக்கது."

யாழ் மாநகரமேயர் விழா ஆரம்பத்தில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசுகள் வழங்கியதோடு பிரபல தவில் வித்துவான் லயஞான குபேரபூபதி திரு. வி. தட்சணமூர்த்திக்கு தங்கப்பதக்கம் அணிவித்து குரும்பசிட்டி பொதுமக்கள் சார்பில் கௌரவம் அளிக்கப்பட்டது. இவ்விழாவில் வாய்வீணைவாத்தியம், தவில் கச்சேரி, சமூக நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திரு, க. செல்வரமூர்த்தி நன்றியுரை கூறினார்.



## ஆசியாவில் ஒரே மனிதர் எம். எஸ்ஸி. சித்தியடைந்தார்

யாழ்ப்பாணம், செவ்,

பிரபல தமிழ் பொருளியலாளர் திரு. என். சிவநேசன் இந்தவருடம் மேமாதம் நடைபெற்ற எம். எஸ்ஸி. லண்டன் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார். இப்பரீட்சையில் சித்தியெய்திய இருவரில் திரு. சிவநேசன் ஒருவர் தான் ஆசியாவிலிருந்து சித்தியடைந்தவராவர். "அபிவிருத்தியடையாத நாடுகளின் பொது ஸ்தாபனங்களின் அபிவிருத்தி முயற்சி" என்ற தலைப்பில் திரு. சிவநேசனல் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் லண்டன் சர்வகலாசாலையினுல் மிகவும் குறிப்பிடத்தக்கவைகளாக கணிக்கப்பட்டுள்ளன.

கோலாலம்பூரில் தனது ஆரம்பக்கல்வியைக் கற்று பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இவர் பயின்றார். அக்காலத்தில் அவர் இலங்கை மாணவர் காங்கிரஸின் தலைவராகவும், இளம் தமிழர் இயக்கத்தின் பாதுகாவலராகவும் கடமையாற்றினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி அரசியலில் ஈடுபடுவதற்காக தனது பதவியை ராஜினுமாச் செய்திருந்தார். 1960-ம், 1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களின்போது திரு. சிவநேசன் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட சமூக பொருளாதார சங்கங்களில் இவர் பிரதான உத்தியோகங்கள் வகிக்கின்ருர்.

திரு. சிவனேசன் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சமாதான நீதவான் திரு. ஏ. நமசிவாயத்தின் சிரேஷ்ட புதல்வராவர்,

## "விட்டாஸ்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரவாதத்தினுல், பாலுணவில் அதிக பங்கு பழுதடைந்துவிடும். பாற்சபையினுல் இவ்வருடம் மே மாதம் மேலும் 449,808 ருத்தல் பால் உணவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக நடவடிக்கைகள் பால்சபையினுல் தொடர்ந்து திட்டமெதுவுமின்றி நடைபெற்று வருகிறது. கடந்த வருடமும், ஆடிட்டர் ஜெனரல் செலவை கட்டுப்படுத்துவதற்கு சபையினுல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வரவு-செலவு திட்டம் அவசியமென தலைவருக்கு சுட்டிக்காட்டினர்.

இலங்கை போக்குவரத்து சபைபற்றி இவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 1963-ம் ஆண்டு, பஸ்களில் ஏற்படும் சிறுயந்திரக் கோளாறுகளைத் திருத்துவதற்கு,98,786ரூபாய்பெறும

(3-ம் கலம்பார்க்க)

## டாக்டர் நாகநாதன் வியாழனன்று இலங்கை திரும்புகிறார்

யாழ்ப்பாணம், செவ்,

சிகிச்சை பெறும் பொருட்டு லண்டன் சென்றிருந்த நல்லூர் எம். பி. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் வியாழக்கிழமை இலங்கை திரும்புவார்.



இவர் தற்பொழுது பூரண சுகமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் இருந்து டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கெய்ரோ சென்று அங்குள்ள இலங்கை ஹைகமிஷனில் கடமையாற்றும் தமது மகளுடன் சிலநாட்கள் தங்கியிருந்தார். இவர் ஏர் இந்தியா விமானத்தில் இலங்கை வந்து சேருவார். டாக்டர் நாகநாதன் பிரயாணம் செய்யும் "ஏர் இந்தியா" விமானம் வியாழக்கிழமை பிற்கபல் 2 மணிக்கு இரத்மலானைவிமான நிலையத்தை வந்தடையும்.

## கல்லூரிகள் அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்

சேர் கந்தையா வைத்தியநாதன் மறைவு குறித்து நேற்று யாழ்ப்பாணத்தில் சில கல்லூரிகள் மூடப்பட்டன.

## ஜி. ஜி., ஐ. நா. சென்றார்

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு, யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. நேற்று முன்தினம் நியுயோர்க்குக்குப் பிரயாணமானர்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகிறது.



நியுயோர்க் செல்வதற்காக அவர் கொள்ளுபிட்டியிலுள்ள தமது வாசஸ்தலத்திலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 3-45-க்கு கட்டுநாயக்கா விமானநிலையத்துக்கு காரில் புறப்பட்டுச் சென்றபொழுது அவரை வழியனுப்பிவைப்பதற்காக உறவினர்களும் ஏராளமான நண்பர்களும் கட்சிப் பிரமுகர்களும் மற்றும் பலரும் அவருடன் கூடவே கார்களில் விமான நிலையத்துக்குச் சென்னர்.

ஐ. நா. கூட்டத்தில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுகோஷ்டிக்கு தலைமை வகித்துச் செல்லும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்; இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் விசேஷ பிரதிநிதியாகச் செல்கின்றார்.

ஐ. நா. கூட்டத்தில் கலந்து கொண்டு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வேறு பல நாடுகளுக்கும் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org